தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண். 62/2026 நாள். 11.06.2026

செய்திக்குறிப்பு

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) - 2026.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் உதவி பொறியாளர் (மின்னியியல்) மற்றும் உதவி கணக்கு அலுவலர் ஆகிய பதவிகளுக்கான காலிப்பணியிடங்கள், ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்)-க்கான அறிவிக்கை, எண்.4/2026, நாள் 20.05.2026-ன் பிற்சேர்க்கை எண்.4A/2026, நாள்.11.06.2026-ல் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், இத்தெரிவிற்கு ஏற்கனவே, விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பிக்கும் தகுதியினை பெற்றிருப்பின், தங்களின் இணையவழி விண்ணப்பத்தினை திருத்தம்(update) செய்துகொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு.பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்